## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீபல்ஸ் லீசிங் என்ட் பைனான்ஸ் பி.எல்.சி நிறுவனம்(''கம்பனி'') மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (''தொகுதி'') 2021மார்ச் 31 இல் உள்ளவாறான தொகுக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று,இலாப நட்டக கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

கம்பனியின் 2021மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனிமற்றும் அதன் துணைக் கம்பனிகளின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தொகுதி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதிஅதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வின் போது கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடு என்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளபபடுகின்ற கணக்காயவில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவது இல்லை. பிறழ் கூற்றுக்கள் ஆனவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்தில் எடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினை பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள்கம்பனிதொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின்செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனிஅதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின்வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிசார் அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்.**

**1.5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 1. | நிறுவனமானது அரச நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களை கை முறையாக அடையாளம் காட்டுகின்றது. | நிர்வாகம் இக் கருத்தை ஏற்றுக் கொள்கின்றது. எதிர்காலத்தில் அரசு நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களை அடையாளம் காண தனி குறியீட்டை உருவாக்கும் பணியில் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. | கணினி அமைப்பின் மூலம் அரச நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்களை கைப்பற்றுவதற்கான வாடிக்கையாளர் குறியீட்டை உருவாக்கும் செயல்முறையில் நிறுவனம் ஈடுபட வேண்டும். |
| 2. | மறுகட்டமைக்கப்பட்ட அல்லது மறு சீரமைக்கப்பட்ட மற்றும் மறு நிதியளிப்பு வசதிகளின் மொத்த காலத்தை கணணியில் கண்டறிய முடியவில்லை. | இது ஏற்கனவே அமைப்பில் உள்ளது. இருப்பினும் மொத்த காலமானது மாத இறுதி அறிக்கையில் கண்டறியமுடியாது. 2022 நிதியாண்டில் மாத இறுதி அறிக்கையில் மொத்த காலத்தை கண்டறிய நிறுவனம் மாற்றங்களை செய்யவுள்ளது. | நிறுவனம் 2022 நிதியாண்டில் மொத்த காலத்தை கண்டறிய வேண்டும். |
| 3. | நிறுவனத்தின் தற்போதைய நடைமுறைப்படி, குறைபாடு செயன்முறை ஒரு கைமுறை பயிற்சியாக உள்ளது. இச் செயல்பாட்டில் நிர்வாகம் அதற்கு தேவையான தரவை உருவாக்க பல உள் அறிக்கைகளைத் தொகுக்கிறது. உதாரணமாக, கடந்த நிலுவை நாட்கள்;முதிர்வுதிகதி; கொடுப்பனவு தவறும் முதல் திகதி; கண்கானிக்கப்படவேண்டிய வாடிக்கையாளர் பட்டியல்; மறுசீரமைக்கப்பட்ட வாடிக்கையாளர் பட்டியல் போன்ற தகவல்களைப் பெறுவதில் நிர்வாகத்தில் ஒரு தகவல் மூலாதாரம் இல்லை,என்பதால், அத்தகைய தகவலைப் பிரித்தெடுக்க பல எண்ணிக்கையிலான கணினி அறிக்கைகளைப் பயன்படுத்த வேண்டும். | நிர்வாகம் இக் கருத்தை ஏற்றுக் கொள்கின்றது மற்றும் ICT துறையுடன் இணைந்து குறைபாடு கணிப்பீடு தொடர்பான கணினி சார்ந்த தீர்வை நாங்கள் ஏற்கனவே உருவாக்கியுள்ளோம். முடிவடைந்த ஆண்டைத் தொடர்ந்து வழங்கப்பட்ட தடைக்காலம் காரணமாக, கணினியில் உருவாக்கப்பட்ட குறைபாடு கணிப்பீடு நிறுவனத்தால் பயன்படுத்த முடியவில்லை. | அதிகப்படியான கையேடு வேலைகள் மற்றும் பல அறிக்கைகளை ஒரே தளத்தில் இணைப்பது தவறான குறைபாட்டு அறிக்கைகளுக்கும் மற்றும் மனித பிழைகளுக்கும் வழி வகுக்கும் என்பதால் கணினியால் இயக்கப்படும் தீர்வை பயன்படுத்துவதை நிறுவனம் விரைவுபடுத்த வேண்டும். |

### 1.5.2 சமரசம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அறிக்கையிடப்பட்ட திகதியின் படி "210101059 – கடன்கொடுநர் கட்டுப்பாட்டு – குத்தகை / வாடகைகொள்வனவு" பேரேட்டு கணக்கில் நீண்ட நிலுவையில் உள்ள சில வசதிகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. | இந்த நிலுவைகள் இந்த GL கணக்கிலிருந்து பின்னர் தீர்க்கப்பட்டன. | குறிப்பிடத்தக்க தாமதங்கள் இல்லாமல் நிலுவைகளை தீர்க்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் வரிக்கு முந்தைய செயற்பாட்டு இலாபம் ரூபா 7,095 மில்லியன் மற்றும் அதற்கு முந்தைய ஆண்டின் இலாபம் ரூபா 6,554 மில்லியன். எனவே நிதி விளைவுகளில் ரூபா 541 மில்லியன் அதிகரிப்பைகாணக்கூடியதாக உள்ளது. கடன்கள் மற்றும் பெறுவனவுகள் மற்றும் ஏனைய இழப்புக்கள் மீதான குறைப்பாட்டுகட்டணம் மற்றும் பிற வட்டி செலவினங்கள், ஏனைய இயக்கச் செலவுகள் முறையே ரூபா 3,603 மில்லியன் ரூபா 2,722 மில்லியன் மற்றும் ரூபா 475 மில்லியன் குறைவடைந்தமையே நிதி விளைவுகளின் அதிகரிப்புக்கான முக்கிய காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுமற்றும் அதற்கு முந்தைய நான்கு ஆண்டு காலப்பகுதியில் நிறுவனத்தின் நிதி விளைவுகளை பின்வரும் அட்டவணை சுருக்கமாக கூறுகிறது.

| ஆண்டு | 2020/2021 | 2019/2020 | 2018/2019 | 2017/2018 | 2016/2017 |
|---|---|---|---|---|---|
| **வட்டி வருமானம் (ரூபா.மில்லியன்)** | 24,983 | 31,459 | 30,836 | 26,705 | 22,041 |
| சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது%அதிகரிப்பு / (குறைவு) | (20.58) | 2.02 | 15.47 | 21.16 | |
| **வட்டிச் செலவுகள் (ரூபா.மில்லியன்)** | 13,064 | 15,787 | 15,646 | 14,500 | 11,830 |
| சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது % அதிகரிப்பு / (குறைவு) | (17.24) | 0.99 | 7.9 | 22.58 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வரிக்கு முந்தைய இலாபம் (ரூபா.மில்லியன்)** | 7,095 | 6,554 | 8,672 | 7,070 | 6,400 |
| சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது %அதிகரிப்பு / (குறைவு) | 8.25 | (24.42) | 22.67 | 10.47 | |

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| **விபரம்** | **வேறுபாட்டு தெகை அதிகரிப்பு / (குறைவு)** | **வேறுபாடு %** | **மாற்றத்திற்கான காரணம்** |
|---|---|---|---|
| ---------- | --------------------- | ------------------ | -------------------- |
| கடன்கள் மற்றும் பெறுவனவுகள் தொடர்பான ஏனைய நட்டங்கள் மற்றும் குறைப்பாட்டு கட்டணம் | (3,602,846) | (77.54) | நிதியாண்டின் கடைசி காலாண்டில் வசூலில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக, கடன் மற்றும் பெறுவனவுகளுக்கான குறைபாடு கட்டணம் மற்றும் பிறஇழப்புகள் குறைந்துள்ளன. |
| ஏனைய இயக்க வருமானம் | (296,113) | (68.04) | துணை நிறுவனங்களின் பங்கிலாப வருமானம் குறைவதால் மற்ற இயக்க வருமானம் குறைந்தது. |
| ஏனைய இயக்க செலவுகள் | (475,385) | (22.76) | தொற்றுநோய்களின் விளைவாக செயல்பாடுகள் மந்தமானதால் அந்தக் காலகட்டத்தில் வணிக ஊக்குவிப்புச் செலவுகள் மற்றும் பொது பயன்பாட்டுச் செலவுகள் குறைக்கப்பட்டன. |
| வட்டி வருமானம் | (6,475,663) | (20.58) | இந்தச் சரிவுக்கு முக்கியமாகக் காரணம்,வட்டி வருமானம் மற்றும் தடைக்காலம் காரணமாக காலம் முழுதும் வட்டி விகிதங்களில் குறிப்பிடத்தக்க குறைப்புவழங்கப்படுகிறது. மேலதிகமாக,ஒட்டுமொத்த வணிக அளவுகளில் கணிசமான குறைப்பு மற்றும் கோவிட் -19 தொற்றின் மத்தியில் குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்ட தடைக்கால கடன்கள் வட்டி வருமானத்தை எதிர்மறையாக பாதித்தது. |
| வட்டி செலவினங்கள் | (2,722,276) | (17.24) | ஆண்டின் முற்பகுதியில் ஒட்டுமொத்த வணிக அளவுகள் மற்றும் வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டதன் விளைவாக வட்டிச் செலவும் குறைந்துள்ளது. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட துறை விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக்குஉட்பட்ட ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளுக்கான நிறுவனத்தின் சில முக்கியமான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | துறை விகிதம் | கம்பனி 2020/2021 | கம்பனி 2019/2020 |
|---|---|---|---|
| **செயற்திறன் விகிதங்கள்** | | | |
| உரிமை மூலதன திரும்பல்(ROE) | 12.83 | 12.49 | 10.00 |
| சொத்துக்கள் மீதான வருமானம் (ROA) | 3.14 | 3.49 | 2.64 |
| தேறிய வட்டி எல்லை | 7.38 | 7.58 | 9.68 |
| **சொத்துக்களின் தர விகிதம்** | | | |
| மொத்த செயல்படாத கடன்கள் (NPL) | 11.31 | 9.22 | 9.04 |
| **போதுமான மூலதன விகிதங்கள்** | | | |
| Tier 1மூலதனம் (குறைந்த பட்சம்7%) | 13.55 | 17.72 | 15.12 |
| மொத்த மூலதனம் (குறைந்த பட்சம்11 %) | 14.84 | 18.58 | 15.99 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனிப்பட்ட குறிப்பிடத்தக்க வாடிக்கையாளரின் நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்கு பிணையாக வைக்கப்பட்ட சொத்தை உணர்ந்து கொள்ள எடுக்கப்பட்ட நேரம் / காலத்தை நியாயப்படுத்த போதுமான செயல் முறை கிடைக்கவில்லை. எடுத்துக் காட்டாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டிலும் பிணையாக வைக்கப்பட்ட சொத்தை உணர்ந்து கொள்ள எதிர்பார்க்கப்படும் தீர்பனவு ஆண்டுகள் ஒரே மாதிரியாக இருந்தன. | 1) எசோ கார்ஸ் ஜபான் (பிவிடி) லிமிடட் மேலே உள்ள வாடிக்கையாளர் சொத்துக்களுக்கு எதிரான வசதிகள் வழக்கு விசாரணையில் உள்ளன. மேலும் இரண்டு வசதிகளுக்கும் நாங்கள் ரிட் அனுமதியை | நிறுவனம் நம்பகமான சான்றுகளுடன் மதிப்பீடுகளை நியாாப்படுத்த முடியும். |

| **வாடிக்கையாளர்** | **2021 இல் எதிர்பார்க்கப்படும் காலம்** | **2020 இல் எதிர்பார்க்கப்படும் காலம்** |
|---|---|---|
| எசோ கார்ஸ் ஜபான் (பிவிடி) லிமிடட் (Asho Cars Japan (Pvt) Ltd) | 2 ஆண்டுகள் | 2 ஆண்டுகள் |
| சிலிக்னோ ஹோல்டிங்ஸ் (பிவிடி) லிமிடட் (Selikno Holdings (Pvt) Ltd) | 5 ஆண்டுகள் | 5 ஆண்டுகள் |

பெற்றுள்ளோம். - கொவிட் 19 தொற்று நோய் காரணமாக நாங்கள் எதிர்பார்த்த காலக்கெடுவை நீடிப்பதில் வழக்குகள் தாமதமாகின. சொத்து -1 (தலவதிதையில் அமைந்துள்ளது) சொத்தின் இரண்டாம் நிலை அடமானத்தை நாங்கள் பெற்றுள்ளோம் மற்றும் முதன்மை அடமானம் சொத்திருப்பவர் கொமர்ஷல் வங்கி. கொமர்ஷல் வங்கி அதன் பராடா உரிமைகளை நிறைவேற்றியுள்ளது. ஆனால் வாடிக்கையாளர் அதற்கு எதிராக ஆட்சேபனையை தாக்கல் செய்துள்ளார். எனவே வழக்கு தாமதமானது. சொத்து -2 (கடுகஸ்தோட்ட வீதியில் அமைந்துள்ளது) சொத்துக்காக ரிட் நிறைவேற்றப்பட்டது. அனால் பின்னர் வழக்கை தாமதப்படுத்திய வாடிக்கையாளருடன் ஒரு சமரசத்திற்கு செல்ல நீதிமன்றம் அறிவுறுத்தியது. ரிட்டை செயல்படுத்தும் நேரத்தில் வாடிக்கையாளர் -

| | | | |
|---|---|---|---|
| | | எனவே அடுத்த கட்டமாக வாடிக்கையாளர் இந்த சொத்தில் வசிக்கவில்லை என்பதை ஏலம் நிருபிக்க வேண்டும். இது சொத்தை ஏலம் விட அனுமதிக்கிறது. மேலும் இது தொடர்பான ஆதாரங்களைச் சேகரித்து அவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க நேரம் எடுக்கும்.<br><br>(2)சிலிக்னோ ஹோல்டிங்ஸ் (பிவிடி) லிமிடட் 2020 ஆம் அண்டில் வாடிக்கையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகயைத் தொடங்குவதன் மூலம் நிலுவைத் தொகையை மீட்க எதிர்பார்க்கபடுகின்றது. 2021 ஆம் ஆண்டில் ஒரு கொடுப்பனவுத் திட்டத்தை மேற்கொள்ள பேச்சு வார்த்தை நடத்த வாடிக்கையாளர் எங்களை அணுகினார். மேலும் அவர் திருப்பிச் செலுத்துவதற்கு 4-5 வருட கால அகவாசம் வேண்டினார். | |
| (ஆ) | நிறுவனத்தின் கொள்கைப் படி கிளை மட்டத்தில் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் ஒரு பௌதீகசந்தைப்படுத்தல் கோவையை பராமரிப்பதற்குப் பதிலாக கடன் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் இன் பேங் அமைப்பில் ஸ்கேன் செய்ய வேண்டும். கணக்காய்வின் போது இன் பேங்க் அமைப்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளுக்கு ஸ்கேன் செய்யப்பட்ட CRIB அறிக்கைகள் கிடைக்கவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது. | 2020 நிதி அண்டில் நிறுவனம் காகிதக் கழிவுகளை குறைக்க விரும்புவதால் பாதுகாப்பு ஆவணங்கள் செயல் முறையை நிறுவனம் செல்படுத்த தொடங்கியது மற்றும் அத்தகைய செயல் | நிருவாகம் உள்ளக கொள்கைகளுக்கு இணங்க வேண்டும். |

| **வசதி இலக்கம்:** |
| --- |
| 1 GRLEML2000068500 |
| 2 GRLEML2000068600 |
| 3 GRLEML2000068700 |
| 4 GRLEML2000068900 |
| 5 GRLEML2000069000 |
| 6 GRLEML2000069100 |
| 7 GRLEML2000069200 |
| 8 GRLEML2000069300 |

முறை 2021 நிதியாண்டில் முழுமையாக முடிக்கப்பட்டது. இப்போது முழு ஸ்கேன் பாதுகாப்பு ஆவணங்கள் கணனியில் கிடைக்கின்றன.